பள்ளிகொண்டா

சுங்கச்சாவடி ஊழியரை இருப்புக்கம்பியால் தாக்க முயன்று தப்பிய கும்பல்

போக்குவரத்து பாதிப்பு

அணைக்கட்டு, நவ.19- சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் பள்ளிகொண்டா அருகே கங்கச்சாவடி செயல்பட்டு வருகிறது. இந்த வழியாக நிறைய ஆம்புலன்ஸ்களான வாகனங்கள் சென்று வருகின்றன. இங்கு 'பாஸ்டேக்' முறையில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நேற்று மாலை வேலூரில் இருந்து ஆம்புலன்ஸ் தொகிச்செல்ல கார் ஒன்று வந்தது. அதில் 3 பேர் இருந்தனர். கங்கச் சாவடியில் கார் நின்றபோது கங்கச்சாவடி ஊழியர் காரில் இருந்தவர்களிடம் 'பாஸ்டேக்' முறையில் பணத்தை செலுத்துமாறு கூறியுள்ளார்.

அதற்கு அவர்கள் 'பாஸ்டேக்'கில் பணம் இல்லை எனக் கூறினார்களாம். அதற்கு ஊழியர்கள் தடுத்தனர். உடனே 3 பேரும் காரில் ஏறிக்கொள்ள பணம் செலுத்தாமலேயே அந்த கார் கங்கச்சாவடியை கடந்து சென்றுவிட்டது.

இது குறித்து கங்கச்சாவடி ஊழியர் அசோக் (வயது 32) பள்ளிகொண்டா போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில் பள்ளிகொண்டா போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்மநபர்களை வலைவீசி தேடி வருகின்றனர். தும்பல் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையொட்டி சுமார் அரை மணி நேரம் அந்த மார்க்கத்தில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வேலூர் அருகே

தொழிலாளி விஷம் குடித்து தற்கொலை

அடுக்கம்பாறை, நவ.19- வேலூர் மாவட்டம், மோதகல் கிராமத்தைச் சேர்ந்தவர் குணசேகரன் (வயது 65). கூலி தொழிலாளி. இவர் உடல்நலக் குறைவால் அவதிப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. இதற்காக குணசேகரன் மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார். இருப்பினும் அவர் குணமடையவில்லை.

இதனால் விரக்தி அடைந்த நிலையில் குணசேகரன் கடந்த 14-ந் தேதி வீட்டில் இருந்த பூச்சிகொல்லி மருந்தை குடித்து விட்டார். மயங்கிய நிலையில் கிடந்த அவரை குடும்பத்தினர் மீட்டு சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தனர்.

அங்கு குணசேகரன் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். இது குறித்து வேலூர் தாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆம்பூர்-குடியாத்தம் இடையே இயங்கும்

டவுன் பஸ்கள் அடிக்கடி பழுதாவதால் அனைத்து தரப்பினரும் பாதிப்பு

புதிய பஸ்கள் இயக்க கோரிக்கை

குடியாத்தம், நவ.19- ஆம்பூர் அரசு போக்குவரத்துக் கழக பணிமனை நீர்வாகத்துக்கு உட்பட்ட 2 டவுன் பஸ்கள் நீண்டும் குடியாத்தத்துக்கு வந்து ஆம்பூருக்கு செல்கின்றன.

இந்த டவுன் பஸ்கள் குடியாத்தத்திலிருந்து புறப்பட்டு மேல்பட்டி வழியாக ஆம்பூரிலிருப்பம், கத்தாரண்டபுர் நகர், பள்ளிவீரகுட்டை சங்கராபுரம், ராமச்சந்திரபுரம் நரியம்பட்டு, கூடாம்பூர் வழியாக ஆம்பூர் செல்கிறது.

இவை பழைய பஸ்களாக உள்ளதால் அடிக்கடி பழுதாகி நடுவழியில் நின்று விடுகிறது. இதனை நம்பி உள்ள பள்ளி மாணவர்களும், வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள், ஊழியர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

வனமும், வாழ்வும் பயிற்சி முகாமை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்து ஆசிரியர்களுக்கு பயிற்சி கையேடுகளை வழங்கிய போது எடுத்தபடம்.

பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் மூலம்

10¾ கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன

அமைச்சர் எ.வ.வேலு பேச்சு

திருவண்ணாமலை, நவ.19- பசுமை தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் 10¾ கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

வனமும், வாழ்வும் பயிற்சி முகாம்

திருவண்ணாமலை வன விரிவாக்க மையத்தில் வனத்துறை சார்பாக பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வனமும், வாழ்வும் பயிற்சி முகாம் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் தர்ப்பகராஜ் தலைமை தாங்கினார். மாவட்ட வன அலுவலர் சதாசிவம் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பயிற்சி கையேடுகளை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது:-

10¾ கோடி மரக்கன்றுகள்

கருணாநிதியின் எண்ணத்தை செயலாக்கும் வகையில் முதல்-அமைச்சர் தமிழ்நாடு முழுவதும் உள்ள வனத்தை வளர்க்க வேண்டும், வனத்தை பாதுகாக்க வேண்டும் என்பதை இலக்காக கொண்டு வனத்துறையை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றி வருகிறார். தமிழ்நாட்டின் பசுமை பரப்பை 23.7 சதவீதமாக இயிருந்து 33 சதவீதமாக உயர்த்துவதற்கு பசுமை தமிழ்நாடு இயக்கம் 2021-ல் தொடங்கப்பட்டது.

இந்த இயக்கத்தின் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 10 கோடியே 86 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டு 1 லட்சத்து 73 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு பசுமையாக்கப்பட்டுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் வனத்துறை மற்றும் பிறத்துறைகளின் மூலம் 62 லட்சத்து 71 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

5 லட்சம் இலக்கு

குறிப்பாக நெடுஞ்சாலைத் துறை சார்பாக கருணாநிதி நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. வனமும் வாழ்வும் திட்டத்தின் மூலம் ஆசிரியர்கள் மூலமாக மாணவர்களுக்கு பசுமை பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியின் முக்கியத்துவத்தையும், பசுமையை உருவாக்குவதன் மூலமாக நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய புரிதலும் தெளிவும் பள்ளி பருவத்திலேயே மேம்படக் உதவுகிறது.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட வனத்துறை வளர்ச்சி முகமை நிட்ட இணை இயக்குனர் மணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், வனச்சரக அலுவலர்கள் ராமநாதன், சக்திவேல், முருகன், செல்வம், தமிழ்அரசன், திருக்கோவிலூர் வனச்சரகர் உறுப்பினர் இராஜேந்திரன், மாவட்ட பொருளாளர் பன்னீர்செல்வம், துணை செயலாளர் பிரியா விஜயராங்கன், மாநகர செயலாளர் காந்தி வேலுமாறன் மற்றும் வனத்துறையினர், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் ஜெயிலில்

விசாரணை கைதிகள் நூதன முறையில் கஞ்சா கடத்தல்

வேலூர், நவ.19- வேலூர் ஜெயிலில் விசாரணை கைதிகள் நூதன முறையில் கஞ்சா கடத்தினர். இதுதொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வழக்கு விசாரணை

வேலூர் தொரப்பாடியில் மத்திய ஆண்கள் சிறை அமைந்துள்ளது. இங்கு தண்டனை மற்றும் விசாரணை கைதிகள் 700-க்கும் மேற்பட்டவர்கள் அடைக்கப்பட்டு உள்ளனர்.

அதன்படி திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த மணிகண்டன் (வயது 28) மற்றும் மதன்குமார் (26) ஆகிய இருவரும் வேலூர் ஆண்கள் மத்திய சிறையில் விசாரணை கைதிகளாக அடைக்கப்பட்டுள்ளனர்.

இருவரையும் வழக்கு விசாரணைக்காக திருவண்ணாமலை கோர்ட்டில் ஆஜர்படுத்துவதற்காக போலீசார் நேற்று முன்தினம் அழைத்துச் சென்றனர்.

கஞ்சாவை மறைத்து வைத்து...

கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட பிறகு மீண்டும் வேலூர் மத்திய சிறைக்கு மாலையில் அழைத்து வந்தனர். சிறை துணைவு வாசலில் இருவரையும் சிறைக்காவலர்கள் சோதனை செய்தனர். அப்போது அவர்கள் நூதன முறையில் தங்களது ஆசனவாயில் தலா 5 கிராம் கொண்ட கஞ்சா பொட்டலத்தை மறைத்து வைத்து கடத்தி வந்தது தெரிவந்தது. பின்னர் அவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். விசாரணையில் வேலூர் ஜெயிலில் கவிபாலாஜி என்ற கைதியின் நண்பர் ஒருவர் கோர்ட்டு கழிவறையில் கஞ்சா வைத்து சென்றதும், அதனை இவர்கள் 2 பேர் எடுத்து வந்ததும் தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து கவிபாலாஜி, மதன்குமார், மணிகண்டன் ஆகிய 3 பேர் மீது பாகாயம் போலீசில் புகார் செய்யப்பட்டது. அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுதவிர போலீசார் கழிவறை, வழக்கு விசாரணைக்காக கோர்ட்டுக்கு சென்றபோது அங்குள்ள கழிவறையில் இருவரின் கூட்டாளிகள் காரணவு கஞ்சாவை பதுக்கி வைத்திருக்கலாம். அதை அவர்கள் மறைத்து வைத்து ஜெயிலுக்கு கடத்தி வந்திருக்கலாம் என்று கருதுகிறோம். இதுகுறித்து மேல்விசாரணை நடத்தி வருகிறோம் என்றனர். மேலும் ஜெயிலில் இருந்து கைதிகளை அழைத்து செல்லும் போலீசார் அவர்களை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கூறினர்.

வாடகைக்கு

வேலூர் வேலப்பாடி

பாம் சொசைட்டி எதிரில் மெயின் ரோட்டில்

கீழ்தளம்: 1500 ச.அடி

முதல் தளம்: 1500 ச.அடி

இரண்டாம் தளம்: 1500 ச.அடி

தனியாகவோ/மொத்தமாகவோ

அணுகவும் K.P.அரிகிருஷ்ணன்

9840375714 (5 PM to 8 PM)

வாகனம் விற்பனைக்கு

VEHICLE NO	DESCRIPTION	MODEL
TN 09 DF-3191	TOYOTA ETIOS DIESEL-P	2019

Contact No : 9894955383 9600096483

WANTED

Kitchen Supervisor - 2 Nos

WANTED ACCOUNTANT / COMPUTER OPERATOR

ஆம்பூர் பைபாஸ் சாலையில் இயங்கி வரும்

❖AR ரெசிடென்சி ❖கோமதி ரெசிடென்சி மற்றும்

❖ARS பார் நிறுவனங்களில் பணியாற்ற

ACCOUNTANT / COMPUTER OPERATOR (கூண்ட் டாப்) தேவை.

Any Degree மற்றும் முன் அனுபவம்

தகுதியானவர்கள் ஒரு வாரத்துக்குள் கோர்ட் தொடர்புகொள்ளவும்.

உரிமையாளர் A.ராஜா

98946 88703, 95003 03952

Indian Bank

இந்தியன் வங்கி

மண்டல அலுவலகம், வேலூர். 3,4வ ஃபிட், 2வது தளம், வேலு கிருஷ்ணா சாலை தொலைபேசி எண்: 0416-2248620

வெள்ளாத்தூர் கிளைக்கான அலுவலகத்தை குத்தகைக்கு எடுப்பதற்கான டெண்டர்களை அழைக்கும் அறிவிப்பு

பொதுத்துறை வங்கியான இந்தியன் வங்கி 1906 சதா அடி வளமிக்க வேலூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளாத்தூரில் குத்தகை அடிப்படையில் (உடையாக கட்டப்பட்ட / கட்டுமானத்தில் உள்ள) அலுவலக வளாகங்களின் உரிமையாளர்களிடமிருந்து 3 கை முறையின் தொழில்நுட்ப மற்றும் நிதி சமர்ப்பிப்புகளை அழைக்கிறது. தகுதிகளுக்கு காப்பீட் டிமாண்ட் வரைவுடன் 15 வருட குத்தகைக் காலத்திற்கு கிளை அமைக்கலாம்.

டெண்டர் படிவங்களை பிரிவுகள் முகவரியில் இருந்து 19.11.2025 முதல் 02.12.2025 வரை DD / IOB-ல் மூலம் ரூ.250 திரும்பி செலுத்தாது செலுத்தி இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம், வேலூர் என்ற முகவரிக்கு தொலைபேசி எண்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 02.12.2025 மாலை 3 மணி. டெண்டர் மற்றும் டெண்டர் படிவங்களின் விவரங்களை எங்கள் வலைத்தளமான www.indianbank.bank.in இல் தெரிவு.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு அல்லது அனைத்து முன்மொழிவுகளையும் நிராகரிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

DGM / மண்டல மேலாளர்

வணிகத் துறை, வேலூர்